**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்

**2024 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 12 ஆம் நாள் புதன்கிழமை**

**அசல் வழக்கு எண் –142/2023**

**CNR No:TNAL050001842023**

தமிழரசி (எ) முத்தமிழ்ச்செல்வி, வயது 63, க/பெ.இராமச்சந்திரன்,
க.எண்.9D, சுவிகார எடத்தெரு, மேல்புவனகிரி அஞ்சல்
மற்றும் கிராமம், மேல் புவனகிரி வட்டம், கடலூர் மாவட்டம். – வாதி

/எதிர்/

1. கந்தன், வயது 75, த/பெ.சின்னபிள்ளை,
2. சதீஸ், வயது 43, த/பெ.கந்தன், (இருவரும்)
   ரெட்டிப்பாளையம் கிராமம், ஸ்ரீராமன் மதுரா,
   ஆண்டிமடம் வட்டம், அரியலூர் மாவட்டம்.
3. வட்டாட்சியர் அவர்கள், வட்டாட்சியர் அலுவலகம் ஆண்டிமடம்,
   ஆண்டிமடம் வட்டம், அரியலூர் மாவட்டம்.
4. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
   உடையார்பாளையம், உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம்.
5. மாவட்ட ஆட்சியர் அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலம்,
   அரியலூர், அரியலூர் வட்டம் மற்றும் மாவட்டம். – பிரதிவாதிகள்

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் நாள் | : | 12.07.2023 |
| வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 12.07.2023 |
| வியாஜ்ஜிய மூலம் | : | 22.07.1987, 22.06.2022, 28.06.2022, 05.07.2023 |
| வழக்கின் மொத்த பொறுமானம் | : | Rs.2000/– |
| செலுத்தவேண்டிய நீதிமன்ற கட்டணம் | : | Rs.60/– |
| செலுத்திய நீதிமன்ற கட்டணம் | : | Rs.60/– |
| நீதிமன்ற கட்டணத்திற்கான சட்டப்பிரிவு | : | 27(C), 27 (C), TNCF Act |

தாவா சொத்தில் வாதிக்குரிய உரிமையிலும், அனுபவத்திலும் 1, 2 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, எவ்வித இடையூறும் செய்யாமல் இருக்க நிரந்தர தடையுறுத்துக்கட்டளை வழங்கியும், தாவா சொத்திற்கு வாதியின் பெயருக்கு 3, 4, 5 பிரதிவாதிகள் பட்டா வழங்க 3, 4, 5 பிரதிவாதிகளுக்கு செயலுறுத்துக்கட்டளை வழங்கியும், தாவா செலவு தொகை பிரதிவாதிகளிடமிருந்து

வாதிக்கு கிடைக்கவும், மற்றும் சமூகம் நீதிமன்றத்திற்கு தம்யுக்தமாய் தோன்றும் இதர யாவொத்த பரிகாரம் வாதிக்கு வழங்கி தீர்ப்பும், தீர்ப்பாணையும் செய்ய வாதி சமூகம் நீதிமன்றத்தில் வேண்டி பிரார்த்திக்கின்றார்.

இவ்வழக்கானது 12.06.2024 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.இள.சிவராமன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.தமிழ் காந்தி அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 5 வரையுள்ள பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

<u>**தீர்ப்பாணை**</u>

1) வாதி ஆஜர். 2 வது பிரதிவாதி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

2) உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 17 விதி 1 ன்படி வாதியின் தரப்பு வழக்கறிஞர் மூலம் மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையில், தள்ளுபடி செய்யப்பட்டது.

3) கடந்த வாய்தாவில் வாதி தரப்பில் ஒத்திவைப்பு மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

4) இன்று இவ்வழக்கு சிறப்பு பட்டியல் விசாரணைக்காக பட்டியலிடப்பட்டிருந்தது.

5) இந்நிலையில் வாதியின் வருகை மிகவும் அவசியமாகிறது. வாதி தனது தரப்பு விசாரணையை தொடங்க முன்வரவில்லை.

6) எனவே இந்நீதிமன்றம் வாதி தனது தரப்பு விசாரணையை தொடர்ந்து நடத்த விரும்பவில்லை எனக் கருதுகிறது.

7) எனவே, நீதியின் நலன் கருதி இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

2024–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பம் இடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

<u>சொத்து விபரம்</u>

அரியலூர் பதிவு மாவட்டம், ஆண்டிமடம் சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட ஸ்ரீராமன் கிராம நத்தம் சர்வே எண்கள்.34/3B–ல் 0.0220 ச.மீ 1 செண்ட், 34/3F–ல் 41.32 ஏர்ஸில் 1 ½ சென்ட் ஆக கூடுதல் 2 ½ சென்ட்.

இதற்கு ஒன்றிணைந்த நான்கெல்லை விபரம். வீதிக்கு தெற்கு, சிவக்குமார் மனைக்கு கிழக்கு, பெருமாள் மனைக்கு மேற்கு, மணிகண்டன் மனைக்கு வடக்கு.

ஒப்பம்/–திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்

**2024 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 12 ஆம் நாள் புதன்கிழமை**
**அசல் வழக்கு எண் –142/2023**
**CNR No:TNAL050001842023**

தமிழரசி (எ) முத்தமிழ்ச்செல்வி – வாதி

/எதிர்/

1. கந்தன்,
2. சதீஸ்,
3. வட்டாட்சியர் அவர்கள், ஆண்டிமடம்,
4. வருவாய் வட்டாட்சியர் அவர்கள், உடையார்பாளையம்,
5. மாவட்ட ஆட்சியர் அவர்கள், அரியலூர். – பிரதிவாதிகள்

**மதிப்பீட்டு படிவம்**

| | | |
|---|---|---|
| 1) | வழக்கிற்கான பிரிவும், உட்பிரிவும் | – 27(C), 27(C) TNCF Act |
| 2) | தாவா பொறுமானம் | – Rs.2000/– |
| 3) | செலுத்தப்பட்டுள்ள நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | – Rs.60/– |

//உத்தரவின்படி//

தலைமை எழுத்தர்,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
ஜெயங்கொண்டம்.